**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்**
**அறிக்கை**
**(07.08.2021 முதல் 11. 08. 2021 )**

**அறிக்கை எண் 063/2021** **தேதி .06.08.2021**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (03.08.2021 முதல் 05..08.2021) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு - 11 08.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03/08 | 04/08 | 05 /08 | தேதி | நாள்-1 07/08 | நாள்-2 08/08 | நாள்-3 09/08 | நாள்-4 1 0/08 | நாள்-5 11/08 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 8 | 10 | 15 | 10 | 15 |
| 33 | 33 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 23 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| 6 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 76 | 83 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 48 | 60 | 70 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| 21 | 23 | 19 | காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 15 | 15 | 15 | 15 | 15 |
| 230 | 230 | 180 | காற்று வீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (07.08.2021 முதல் 11. 08. 2021 )**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். மேகமூட்டமான வானிலையுடன் அடுத்து வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலையடிவாரங்களில் இடியுடன் கூடிய மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 15 கிமீ மேல் காணப்படுவதால் கரும்பு மற்றும் வாழைக்கு போதிய முட்டு கொடுக்க வேண்டும். புதியதாக விதைக்கப்பட்ட பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவேண்டும். |
| மக்காச்சோளம் | வளர் பருவம். | பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவையில் மக்காச்சோள விதைப்பைத் தொடர வேண்டும்.<br>நடவு செய்து 30 நாட்களான இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 55கிலோ யூரியா மற்றும் 12கிலோ பொட்டாஷை களை எடுத்த பின்பு மேலுரமாக இட வேண்டும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரித்து விட்டம் கட்டுதல் வேண்டும். |
| கொடிவகை காய்கறிப்பயிர்கள் | விதைப்பு | ஆடிப்பட்டம் கொடிவகை பயிர்களான பீர்க்கங்காய், பாவற்காய், புடலைங்காய் போன்ற பயிர்களை விதைப்பதற்கு உகந்த காலமாகும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 15 கிமீக்கு மேல்அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| மஞ்சள் | வளர் பருவம். | மஞ்சள் பயிரிட்டு 60 நாட்கள் ஆகியிருக்கும் பட்சத்தில் பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இரண்டாவது மேலுரமாக 50 கிலோ யூரியா, மற்றும் 30 கிலோ மியூரேட் ஆப் பொட்டாஷ் கலந்து இடவேண்டும்.<br>காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த மழையில்லாத நாட்களில் ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் அல்லது 1000 கிராம் மேன்கோசெப் அல்லது 1250 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | அதிகப்படியான காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியை தடுக்க சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும்.<br>காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்க விட வேண்டும்.<br>பகல் நேர வெப்பநிலை 32° செ அதிகமாக நிலவ வாய்ப்புள்ளதால், கோழி மற்றும் கால்நடைத்தீவனங்களில் எலக்ட்ரோலைட்ஸ் மற்றும் தாதுஉப்புகள் கலந்து கொடுக்க வேண்டும்..<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

**குறுஞ்செய்தி**

- இடியுடன் கூடிய மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. புதியதாக விதைக்கப்பட்ட பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**